எதிர்க்க மாட்டான் ஆய்ந்த தொரு அண்டத்தின் வங்கம் நாகம் சூதங் கெந்தி அருளைப் பாரே.

71. அருளான கற்பங்கள் கொள்ளும் போது அடங்காத தாகமொடு நீரில் தோசம்
மருளான மயக்கமொடு கண்ணில் மய்யல் வாதத்திலெழுந்த ஈளை ரோகம்
சுருளான மந்தார காசமொடு சுவாச காசமொடு சதையில்த் தோஷம்
கருவான கற்பத்தால் வந்த நோய்கள் காணாதே ஓடுமடா கண்டுபாரே.

72. கண்டு கொள்ளும் அண்டத்தின் செந்தூரந்தான் கலக்கமடா நாடியெல்லா மிருகுந் தேகம்
உண்டு விடு குன்றியிடை பனைவெல்லத்தில் ஒரு போது கொண்டாக்கால். போது போதும்
மண்டுகின்ற சயரோகம் மிஞ்சித்தானால் வகை சொல்லக் கேளடா ஆடாதோடை
யின்டு சங்கு தூதுவளை முருக்கு முல்லை இளந்துளசி கண்டங்கத்திரி மென்னே.

73. என்னவே மூலிகை தான் வகையொன்றுக்கு யிடித்ததொரு சாறு தான் படி வதந்தான்
சொன்னதொரு மூலிகையின் சாத்தை யெல்லாம் அன்று மொரு பனைவெல்லம் பலமூன்று பத்து
அன்னவே அடுப்பில் வைத்துக் காயும் போது அரத்தை யொடு திரிகடுகு திரிபலாதி
விள்ளவே கற்கண்டு வசம்பினோடு விளங்கவே வகை யொன்று பலந்தான் ரெண்டே.

74. பலமான தொரு பலந்தான் நெல் பொரியுங் கட்டி பாங்காக மருந்தெல்லாம் சூரணித்து
சிலமான பாகெல்லாம் பாகு சேரில் திடமான சூரணத்தை யதிலே பாய்ச்சி
பலமான தேனிலொரு படிதான் வாரு பேசாதே ஆவின் நெய்ப்படி தான் வாரு
குலமான லேகியமாய் வளித்து வைத்துக் கசாதே. பீங்கானில் பதனம் பண்ணே.

75. பதனமாய் வைத்திருப்பாய் லேகியத்தை பாங்காகக் களஞ்சி நிறை யெடுத்துக் கொண்டு
சதமான அண்டத்தின் செந்தூரத்தை சுருக்காகக் குன்றியிடை ஒரு போதுன்னு

விதன மெல்லா மொளிந்ததடா சலம் போன போக்கு வேரேடே அமர்ந்த கடவு பரத்தில் வேகம்
மதகாமேசுப் பாவி நன்குக் கட்டு மங்கையரைத் தோய்ந்தாலும் வாராதென்னே.

திருஉன் அப்பிரக செந்தூரம்:-

76. ஆட் வாராத திருஉ அப்பிரகந்தன்னை வாய்ப்பாக நவநீதம் செய்து கொண்டு
போடப்பா பல்மொன்று வாங்கிக் கொண்டு பலுத்த வெடியுப்புடனே
காரமுடன் சீனமொடு சூடன் கூட்டி தயவாகக் கல்உப்பு வகை யொன்றுக்கு
பாராதே களஞ்சி யொன்று கூடப் போடு பாங்கான பழச் சாத்தால் ஒரு நாளாட்டடே.

77. ஆட்டிய பின் வில்லை செய்து உலரப் போட்டு அன்புதெருவுக்குள் வைத்துப் புடத்தைப் போடு
முடிய பின்னெடுத்ததனைக் கல்வத்திட்டு முறங்கவே கற்பூர வள்ளிச் சாத்தால்
ஆட்டிய பின் அரைத்திடுவாய் பலந்தான் கெந்தி யுறப்போடு நாளொன்று சென்றால் வில்லை
காட்டுவாய் ரவி முகத்தில் உலர்ந்த பின்பு கட்டாக அன்பதெருக்குள்ளே போடே.

78. போடப்பா புடமாறி யெடுத்துக் கொண்டு புகழாகப் பழச் சாத்தால் கல்வத்திட்டு
ஆட்டப்பா நாளொன்று அரைத்து வில்லை அப்பனே அரைத்து முன்போல் புடத்தைப் போடு
தேடப்பா ஆறின பின் கல்வத்திட்டுத் திரமாகக் குட்டித் தக்காளிச் சாத்தால்
கூட்டப்பா நாளொன்று அரைத்துப் பின்பு மும்முறவே வில்லை செய்து புடத்தைப் போடே.

79. புடமாறி யெடுத்ததனை யெருக்கம் பாலால் பேசாமல் நாளொன்று அரைப்பாயப்பா
திடமாக வில்லை செய்து உலத்தி தீரப்பா முன் போலே புடத்தைப் போடு
நடமாடும் பின் பொருக்கால் பழச் சாத்தாலே நவிலாதே தினமொன்று அரைத்த பின்பு
உடனுடு சத்துருவாய் காரசாரம் உத்தமனே தனக்கெல்லாந் தின்றவாறே.

80. வாருடனே கருத்திருந்த தேவிநாதம் மாண்டுதடா கன புடமாய் மாட்டு மாட்டு
கூருடனே அப்பிரக நவநீதத்தைக் கொண்டவனர் வைத்தியத்தில் கொட்டினேன் நான்
வீருடனே செந்தூரம் நன்றாய் காட்டால் விளங்கிவே பொற்றலையின் சாறு லாட்டி
தெட்டுடனே ஊறெருவில் புடத்தைப் போடு செந்தூரமாகுமடா செப்பக் கேளே.

81. கேளப்பா அப்பிரக செந்தூரத்தை கெடியாகத் திரிகடுகு தன்னில் கூட்டி
வாளப்பா தேன் நெய்யில் கலந்து கொண்டு மருவி யிந்தச் செந்தூரங் குன்றியிடை கூட்டி
கொள்ளப்பா கெற்பத்தில் வந்த தோசம் கூட்டே போகுமடா பத்து நாள் கொள்ள
ஆளப்பா உதிரத்தில் வாயுவெல்லாம் அபானத்தின் கீழ் வாசல் புக்கிப் போச்சே.

சீந்தி சர்க்கரை:-

82. போச்சப்பா மேகமென்ற தெல்லாம் போகும் புகுந்த தொரு நீரிறக்கு மெல்லாம் போச்சு
ஆச்சப்பா சீந்தியுட சர்க்கரையைச் சொல்வோம் ஆச்சரியம் அஸ்தி சுரம் தோசமில்லை
போச்சப்பா நாடி தனில் தோசமில்லை பிரபலமாய்த் தேக மெல்லாம் குளிர்ச்சி பண்ணும்
வாச்சப்பா வயித்தியத்தின் சர்க்கரையைச் சொல்லார் வாய்ப் பேச்சோ வயித்தியந்தான் வணங்கிக் கேளே.

83. வணங்கியே நீ கேளப்பா புலத்தியனே அய்யா மாட்டாமல்லாமல் சர்க்கரையைச் சொல்வேன்
முணங்கியே போகாமல் பருந்துண்டாக கொண்டு வந்து ரவி யுலத்திக் காய்ந்த பின்பு
பிணங்கியே போகாமல் யிடித்துத் தூளாய் பலமாக வடிகொண்டு சூரணித்து
வளம் பெறவே பொடி படிதான் ஒன்றுக்குள் நீளவாகாகச் சீலத்தை வாரே.

84. வார்த்திடுவாய் மறு நாளில் யிடித்துப் போட்டு மறுபடியும் சலமதிலே முன்போல் விட்டு
கோர்த்திடுவாய் யிப்படியே பத்து வண்ணம் கூறுகச் செய்த பின்பு சொல்லக் கேளு
பார்த்திடுவாய் புளித்த தொரு காடிகள்ளே பழச் சாறு பதினை கொண்டு வாரு
சேர்த்திடுவாம் பின்போலே யிடித்துப் போயிடுமாம் மறுபடியுந்தான் செம்பக் கேளே.

85. கேளப்பா புலத்தியனே சீந்தியுடன் கைப்பு கேட்டதில்லை சித்தரெல்லாஞ் செய்வார்கள்
ஆளப்பா வாயிலிட்டா லண்டவரை மட்டும் கைப் பென்பல் வேப்பங் காய்டோ
வாளப்பா வயித்தியனே யென்று சொன்னேன் வாதிக் கல்லோ சொன்ன மார்க்கமப்பா
ஆளப்பா ஆவின் மோர் படி நாலுக்குள் அப்பனே கால் படி தான் பழச் சாறாட்டே.

86. பழச்சாறு விட்டு பின்பு ஒரு படியாம் பொடிக்கு பாங்காகக் கரைத்து வைத்து மறுநாள்
கேளுமப்பா பழச்சாறு மோரு மிறுத்துப் போட்டுப் பாலாவின் பால் படிக்குள் பொடி தானிட்டு
யிளைச்சல் லோ வங்காளச் சனி சேரு யென்ன சொல்வேன் அரைப்படிதான் சீனி போட்டு
தமைச்சுதப்பா ரவியிலே உலர்ந்த பின்பு தானமுர்த சர்க்கரையாகு மென்று காணே.

87. காணப்பா யிப்படித்தான் சர்க்கரையைச் செப்பார் கை கண்ட சித்தரென்பல் கணக்குச் சொல்லார்
வீணப்பா மற்றெல்லாஞ் சர்க்கரையா அல்ல மீறுகின்ற கசப்பதனை யடக்க மாட்டார்
தோணப்பா சர்க்கரை வாயிற் போட சுருக்கடா அத்தி சுரமெல்லாம் போகும்
பூணப்பா யிதிலோடு மருந்து கூட்ட புகலுவேன் புலத்தியனே கேளு கேளே.

88. கேளப்பா திரிகடுகு மதுரம் ஓமம் கெடியான வாய்விளங்கம் நருக்கு மூலம்
கேளப்பா கற்பூரம் வெம்மப்பூ கிருபையுள்ள சீரகங் கோரோசினை கஸ்தூரி
கேளப்பா சாதிக்காய் பத்திரி கிரும்பு கெடியாக வகைக்கொன்று பலந்தானென்
கேளப்பா இளவறுப்பாச் சூரணித்து கிருபையுடன் சொல்லக் கேள் குலித்தின் பூவே.

89. பூவதனை நிழலிலுலத்திச் சூரணித்து புட்டா சமஞ்சுகச் சீனி காலாய்
பூவதனைச் சேகரித்துச் சூரணந்தான் அமுர்த சர்க்கரைக்கு நாலுக் கொன்று
பாவகனில் கலந்து கொண்டு பதனம் பண்ணு படுபாவி மேக சலம் பறந்து போகும்
ஆவற லேகியந்தான் செய்யக் கேளு அப்பனே தானை விழுதுச் சாறு.

90. வாங்கியே படி நாலு புதுச் சட்டிக்குள் வாரப்பா இளநீரும் படிதான் நாலு
தேங்கியே இரண்டு மொன்றாய்ச் சேகரித்து செப்புவேன் சுருவிஞ்சி பலந்தானென்று
தாங்கியே நன்னாரி பலந்தானென்று காதகமா யேலமது பலந்தானென்று.

91. ஒன்றாக யிதுவெல்லாம் யிடித்துப் போட்டு ஒரு படியாய்க்குறுக்கிய பின் அதிலே சேரு
நன்றான சீனி பலமதிலே போடு ரசபாகம் வரும் போது நேரம் தன்னிலேதான்
வென்றதொரு அமுர்த சஞ்சீவி தன்னை மேவி யரை படி யளந்து யதிலே போடு
குன்றான ஆவின் நெய் படி கால்தான் வாரு கலங்காத நெயிற் பாதி தேனைக் கூட்டே.

92. கொட்டிய பின் மெழுகு பதந் தன்னிலே தான் கூறான பீங்கானில் வழித்து வைப்பாய்
வெட்டினேன் தேகத்தில் நோயகளெல்லாம் விடைய மிட்டு விடையுமிட்டுச் சாதித்தே தான்
அட்டியாய் சொல்வதிந்த அமுர்த லேகியம் அப்பனே ஆருக்குஞ் சொல்லவில்லை
மட்டில்லா வயித்தியத்தின் சாத்திரஞ் சொன்னேன் மாற்கமில்லைச் சூதத்திரத்துக் கொவ்வாறே.

93. ஒவ்வாத லேகியத்தில் களஞ்சி தாக்கி உத்தமனே அப்பிரக செந்தூரத்தை
செவ்வாக்கு மன்றியிடை திரமாய்க் கொள்ளு தேகத்தில் மேக சுரம் மேகவெட்டை
கல்வாத அத்தி சுரம் வெட்டை போகும் கபாலத்தில் வெளுட்டை சுரம் மூட்டம் போகும்
இவ்வகை தான் பத்து நாள் கொள்ளும் போது யெமனும் வெல்லரிது தேகந்தானே.

<u>கருநாக செந்தூரம்</u>:.

94. தானென்ற நாக செந்தூரங் கேளு சார்வான வங்கமதிற் பலந்தானென்று
கானென்ற நற்பவளம் பலந்தானென்று கை முறையாய்ச் சலாசத்துப் பலந்தானென்று
வேனென்ற வில்லை செய்து ரவியில் போட்டு கூறுக உலர்ந்த பின்பு புடத்தைப் போடே.

95. போட்டெடுத்து நாலுக்கொன்று கெந்தி கூட்டிப் புகழாகப் பொற்றலையின்

காட்டெடுத்து வில்லை தனை யுலர்ந்த பின்பு வெரு சுருக்காய் அன்பத்தொரு புடத்தைப் போடு
மூட்டெடுத்துக் கருவங்க செந்தூரந்தான் மோசமில்லை முக்காலும் புடத்தைப் போடே
சூட்டெடுத்துப் பொடி செய்து பதனம் பண்ணு தூடியாகக் குன்றியிடை கொள்ளு கொள்ளே.

96. கொள்ளடா அமுர்த சஞ்சீவி தன்னில் கொண்ட பின்பு சலக் கழிச்சல் கடுப்பு ரத்தம்
விள்ளடா எரியெரிப்பு லிங்கப் புத்து மேகத்தால் லெழுந்த பல தோஷமெல்லாம்
எள்ளடா அணுவளவு பற்பத்தாலே எழுந்த தொரு மேக சல மிறந்து போச்சு
தள்ளடா எமனை வாசி கொண்டு சாத்தடா மண்டலத்தில் சித்தியாமே.

அயத்தகடு செந்தூரம்:- 31.10.63.

97. ஆமப்பா அயத் தகடு பலந்தானென்று அப்பனே அந்திடைக்குச் ரூதங் கூட்டி
வேமப்பா கல்வத்திலாட்டு ஆட்டு வீரமொடு நவச்சாரம் பலந்தானென்று
வாழப்பா மூன்று நாள் கை விடாமல் மாட்டி யரை பொடியாகச் சிவந்து போகு
ஓமப்பா புதுச் சட்டி அடுப்பில் வைத்து மோசங்கள் வாராமல் வருத்திடாயே.

98. வருக்கையிலே பதம் பாரு முருக்கம் பூப் போலாம் வன்னமிட்ட பதத்திலே கருகாமல் வாங்கு
நறுக்கையிலே குன்றியிடை பனைவெல்லத்தில் நிசமாகக் கொண்டிடவே சூலை வாங்கும்
மொசுக்கையிலே யிதின் சுருக்கு யெதுக்குமில்லை ஓகோ கோஷ்டமெல்லாம் ஒளிந்து போகும்
முறுக் குன்ம மென்றதெல்லாம் போகும் வாதர் விஷகடிகள் வாங்கிப் போமே.

99. தூரிசு செந்தூரம்:-

வாங்கிப் போம் தூரிசு செந்தூரங் கேளு வாகான அரப்பொடி தான் பலந்தானென்று
தேங்கிப் போம் கெந்தகந் தான் பலமு மொன்று திறமாக மாய்ந்த பின்பு செப்பக் கேளு
தாங்கிப் போம் தூரிசு மதில் பலந்தானென்று சாதகமாய் பழச் சாத்தில் தினந்தானாட்டு
ஓங்கியதோர் வீரம் ரெண்டு களஞ்சி கூட்டி உத்தமனே அரைத்ததனை வில்லை தட்டே.

100. கட்டியே ரவியிலே உலர்ந்த பின்பு கஜபுடமே போடப்பா மங்க வேண்டாம்
ஒட்டியே ஆறிய பின் செந்தூரந்தான் உண்மையாய்க் குன்றியிடை திரிகடுகு கூட்டி
அட்டி யென்ன மண்டலந்தான் கொள்ளு கொள்ளு ஆச்சரியம் குன்ம மெல்லா மகன்று போகும்
சூட்டியே கெற்பத்தில் தோஷம் போகும் தூடியான சிரணியெல்லாம் சூட்டப் போமே.

101. அரப்பொடி செந்தூரம்:-

சூட்டப்பா அரப்பொடி தான் பலந்தானென்று தூடியான கெந்தகந்தான் பலந்தானென்று
மூட்டப்பா லிங்கமொடு காரசாரம் முனையான உப்ப ரெண்டு சூடன் சீனம்
மாட்டப்பா வகை யொன்று களஞ்சி யொன்று ஆதியென்ற பூவதிலே களஞ்சி யொன்று
மாட்டப்பா காந்தமது பலந்தான் கூட்டி வளமான பழச் சாத்திலரைத்திடாயே.

102. அரைத்திடுவாய் ரெண்டு நாள் கை விடாமல் அப்பனே உலர்ந்த பின்பு வில்லை தன்னை
விரைத்திடுவாய் கெஜபுடத்தில் ஆறின பின் விளங்கிய தோர் முருக்கம் பூப் போலாம் வில்லை
நிரைத்ததனைப் பொடி பண்ணிப் பதனம் பண்ணு நிலையில்லாப் பாவி யென்ற பான்டுரோகம்
கைக் கடுக்க வொட்டாது கடலே புக்கும் கை கண்ட செந்தூரம் கண்டு கொள்ளே

103. கண்டு கொள்ளும ஆவின் பால் புடி தானென்று கைச் சோலம் நன்னாரி விலாமிச்சம் வேர்
விண்டு கொள்ளுங் கீழ்க்காயின் நெல்லிவேரும் விளங்கியதோர் வகை யொன்று பலந்தானென்று
உண்டு கொள்ளும்படி யெட்டு சிலத்திற்குள்ளே உத்தமனே போட்டு வத்தி படிதானென்று
மண்டுபடா பாவடனேகூட வாரு மைந்தனே முகம் புச்சாறு வாரே.

104. வாரப்பா படியொன்று பழச்சாறங்கே வரிசையாய்ப் படியொன்று கரிப்பான் சாறு
சேரப்பா படியொன்று நெல்லிச்சாறு தனித் தனியே சாறு படி படி தானென்
சாரப்பா ரெண்டு பத்து பலந்தான் வெல்லம் தானரைப்பா யெரியிட்டுப் பாகு சேரில்
யேரப்பா திரிபலையின் சீரகத்திரெண்டு யியலான திரிகடுகு மேலந்தானே.

105. ஏல மிலவங்கத் தோலிலை கிராம்பு யெவச்சாரம் சாதிக்காய் நறுக்கு மூலம்
வாலுள்ள மிளகு வாய்விளங்கம் வகையொன்றுக்கே சூரணித்துக் கொண்டு
ஆலை வாய்ச் சங்கு பொடி அதிலே பாதி அப்பனே பாகு வரும் போதில் போடு
சாலவே ஆவின் நெய் ஒரு படி த்தான் வாரு தவறாமல் தேனதிலே அரைப்படி தான் வாரே.

106. வார்த்திட்டு மெழுகு பதமான வாறே மக்களே பீங்கானில் பதனம் பண்ணு
கோர்த்திட்டு லோக செந்தூரந் தின்று குன்றியிடை தினமொன்று யிருநேரந்தான்
சாத்திடவே லேகியந்தான் களஞ்சி ரெண்டு சாதித்து மண்டலந்தான் தின்பாயாகில்
ஏதகிடவே யெந்த வகைப் பாண்டாலும் லேகிய செந்தூரத்தைக் கண்ட போதே.

107. கண்டவுடன் பாண்டங்கே பரந்து தப்பா காயங்கள் வெளுத்திருந்ததேங்கே போச்சு
கொண்டவடன் புகையிலையும் புளியுமாகா கடுகிற பெண்ணுரை யுடுக்கலாகா
பண்டுடைய பத்தியத்தை விட்டாயானால் பம்பாதி லேகிய செந்தூரந்தானே.

108. இல்லை யென்று போகாமல்ச் சொல்லக் கேளு எலுமிச்சம் பழம் பத்து நாலாய்க் கீறி
தொல்லை யென்று போகாது அயசெந்தூரம் தூக்கடா பலங்கால் தான் மண்டுரத்தைச்
செல்லவே சமனாகக் கெந்தி கூட்டி திறமாகப் பழச் சாத்தால் ரெண்டு சாமம்
அல்லவே அரைத்து வில்லை உலர்ந்த பின்பு அப்பனே வாகாகப் புடமாறிப் பின்பு
வல்லதொரு செந்தூரங் கால் பலந்தான் தூக்கி வகையான இந்துப்பு களஞ்சி ரெண்டு கூட்டே.

109. கூட்டியே முன் மருந்து ஒன்றாய்ச் சேர்த்து கொண்டு நற் சீரகமோ களஞ்சி கூட்டி
நாட்டியே பழத்துக்குள் சேரவிட்டு நலமாகக் கரிசாலைச் சாறு நாளி
மூட்டியே கத்தாளஞ் சாறு நாளி மூளுகின்ற செருப்படியின் சாறு நாளி
தாட்டிகமாய் முன்னுளி சாறு வார்த்து சட்டியிலே பழத்தை யெல்லாம் பதித்து வைய்யே.

110. பதித்து வைத்து நெல் குழியில் பத்து நாள் வை பசுவிருட தொழுவுக்குள் பத்து நாள் வை
பதித்து வைத்து பழந் தன்னை தினமொன்றாகப் பத்து நாள் கொள்ளப்பா பாண்டு போகும்
பதித்திருந்த வாத நீர் பாண்டாலும் பறக்குமடா பாண்டெல்லாந்தமே.

<u>கெந்தி:-</u>

111. எல்லாரும் வயித்தியன் போல் நோவு பார்த்தால் விளைச்சதுவோ நோயை அப்பா ஏழை மாண்பர்
வல்லாரும் வாதி மகன் வயித்தியனவான் மற்றவர்கள் நோயறியார் மட்டையப்பா
சொல்லாமல் கொல்லுமடா கெந்தகத்தை கூட்டிடுவாய் நின்ற விடந் தீஞ்சானே
கல்லான கெந்தகந்தான் சாமமொன்று காணப்பா அரைத்து வில்லை கட்டிப் போடே.

112. கட்டுமடா அஞ்செருவில் புடத்தைப் போடு கலங்காதே கெந்தகத்தை யென்ன சொல்வேன்
வெட்டுமடா குஷ்டமொடு கிரந்தி சூலை வெல்லுமடா சூத பற்பம் கூட்டித் தின்று
பட்டு விடும் மேக சுரம் மேகசூலை பறக்குமே மேகத்திலெழுந்த வாய்வு
திட்டமாய் பத்து நாள் கொள்ளும் போது சித்தியடா கற்பத்திராதி தானே.

<u>வெங்கல செந்தூரம்:-</u>

113. உறுதியென்ற வெங்கல செந்தூரங் கேளு உத்தமனே வெங்கலந்தான் பலந்தானென்று
அரிதியென்ற சலாசத்து பலந்தானென்று அண்டத்தோல் பலமொன்று படிலமொரு பலந்

வீறுவென்ற வீரமது பலந்தானென்று வருன தாளகந்தான் பலந்தான் ரெண்டு ·
பொதியி மென்ற கெந்தகந்தான் பலந்தானை போட்டரைப்பாய் கல்வத்தில் பழச் சாத் தாலே.

114. பழச்சாறு விட்டரைப்பாய் மூன்று நாள் திரன் பாங்காக வில்லை செய்து ரவியில் காய்ந்தால்
வளச்சல்லோ போட்டுதடா மாட்டிச் சொண்டு வாகான் பிடத்திலே செந்தூரந் தான்
இளைச்சல்லோ வெல்லத்தில் ஒன்றி கொள்ள யென்ன சொல்வேன் குன்மங்களெட்டுந் தீரும்
தளைச்சிருந்த மேகத்தி லெழுந்த தெல்லாம் தவறிண்டு போகுமடா சார்ந்து பாரே

முத்துமணி:-

115. பாரப்பா முத்துமணி பலந்தானென்று பரை யட்ங்கா நாகமது பலந்தானென்று
சேரப்பா சூதமொரு பலந்தானென்று சிறப்பான வீரமொரு பலந்தானென்று
வாரப்பா முலைப் பாலிலரைத்தொரு நாள் வளமாக வில்லை செய்து ரவியில் போ
வேரப்பா புக்கள்ஞ்சு கெந்தகந்தான் விளங்கவே ரெண்டு பலங் கூட்டி ஆட்டே.

116. கூட்டியே படம் போடு கோளியப்பா அரகரா முத்துமணி செந்தூரந்தான்
நாட்டவே கிரந்தி புத்து யோனிப்புத்து நல்லதொரு லிங்கப் புத்து கண்டமாலை
மூட்டவே மூலங்கள் பிளவை யரையாப்பு மூக்கிலுள்ள சதைத் துணுக்குப் பனிசங்கள்
காட்டவே செந்தூரம் கண்ட போதே காணப்பா கெடி கலந்தி ஓடுந்தானே.

தாம்பிர செந்தூரம்:-

117. தானுன தாளகந்தான் பலந்தானென்று சம்பீரம் பழச் சாறு படி தானென்று
சுருக்குப் போட்டு வேனுன முலைப்பால் கால்படியே தாக்கு விளங்கவே பூறதலரும் பின்பு கேளு
வானுன திருகுகள்ளிப் பால்தான் நாழி வாங்கியதிற் போடுகின்ற மருந்து கேளு
கோனுன திருகுகள்ளியுப்பும் பலம் கொடிய நவச்சார மொடு வீரந்தானே.

118. வீரம் பூரத்துடனே வெடியுப்புச் சீனம் விளங்கவே வகையொன்று களஞ்சி யொன்று
சேரவே பொடித்தந்தப் பாலில் போடு சிறப்பாக மூன்று நாள் செலமாகும்
நீராலே தாளகத்திற் காரங்கால் தான் நீர்த்து முன் சொன்ன பலவீதத்தின்
சாரமது கால் பலந்தான் கூட்டிக் கொண்டு சாகவே யரைத்திடுவாய் மூன்று நாளே.

119. நாள் மூன்றிலரைத்து வில்லை பணம் போற் கட்டி நலமாகச் சுத்தி செய்வாய் தாம்பூரத்தை
கோள் மூன்றில் தீருமப்பா ஊரல் வாங்க கூறுவேன் அண்டத்தோல் பலந்தானென்று
கேள் மஞ்சள் கட்டான் வளலை யொடு கெடியான வெடியுப்புக் காரஞ்சாரம்
பாமுகாறையப் பூ வீரஞ் சூடன் சீனம் பாங்காக வகை யொன்று களஞ்சி ரெண்டே.

120. ரெண்டுடனே அண்டோடு கூட்டிக் கொண்டு நிரையாகப் பழச் சாறு அரைப்படி விட்டாட்டிக் கொண்டு
கொண்டுடனே வில்லை செய்து உலத்திக் கொண்டு கொடுத்திடுவாய் ஒவ்வொன்று தாக்கே தான்
பண்டுடனே தாம்பிரமோ பலந்தானஞ்சு பாங்காகக் கைக்குள்ளே உருகும் போதிற் பலத்தசுத்தி
சண்டாள வூறலைந் தாம்பூரந்தானே.

121. தானுன சுத்தி செய்தருக்கே தான தடையறவே மா குகையிலுருகும் போது
யேனென்ற தாளகத்தின் மெழுகு வில்லை யீந்திடுவாய ஒவ்வொன்றாய்க் கொடுத்த பின்பு
தேனென்ற நிறம் போச்சு வெங்கலம் போலாச்சு திடமாக அடித்துடனே தகர்ந்து தாளாம்
பாரென்ற கல்வத்திற் பொடித்துக் கொண்டு பாங்காக கண்டிடைக்குச் சூதம் வாரே

122. சூதத்தினிடை போடு வீரந் தன்னை அடியாக முலைப் பாலிலரைத்த பின்பு
நாமென்ற பூரமது பத்துக் கொண்டு நாடியரை மூன்று நாள் பின்பு கேளு
பாதமென்ற வாலை ரச மட்டை போலாம் பண்பாக கண்டிடைக்கு கெந்தி கூட்டி
நாதமென்ற பொற் லையின் சாறுலராட்டி நிலைத்திடுவாய் யன்பத்தொரு படத்தை போட்டே.

123. புடத்திலே வெந்துரைத்த செந்தூரத்தை திடங் குன்றிப் பிரமாணம் திரிகடுகு சேர்த்து
நடத்திலே மண்டலந் தானுண்ணும் போது நாளுள பீலிகையும் ஜென்மத்தோடே
சடத்திலே உண்டான கனப்பு வாய்வு சாங்கமாய்த் தீருமடா தாம்பரந் தானே.

124. தாம்பர செந்தூரத்தைத் தின்னும் போது தட்டுண்டு ஜென்மம் போம் அபானங் கேளு
சாம்பியே பிளிந்திருந்த காடி படி யொன்று கண்டங் கத்திரிச் சாத்தாலாட்டி தானென்று
தேம்பியதோர் திருமேனிச் சாற் படி தானென்று சிற செருப்படிச் சாறுபடி தானென்று
வேம்பிட பட்டைச் சாற்படி தானென்று மேலான கரிசாலைச் சார் படி தானென்றே.

125. ஒன்றான இஞ்சிச் சார் படி தானென்று உத்தமனே பூமலையின் பட்டை தன்னை
நன்றாக யெண்படி சார் ஒரு படியாய்க் காய்ச்சி நலமான காயமது படிதானென்று
மன்றான பிரமிச் சார் படி தானென்று வாகாக யிதுவெல்லாம் நாளிக்குள்ளே
சென்றால் ஒன்பது சார் ஒன்றாய்க் காய்ச்சி செப்பக் கேள் புனைவெல்லஞ் சேரப் போடே.

126. போடக் கேள் மூன்று பக்க பலந்தான் போடு புகழான வெள்ளெருக்குப் பச்சைப் பட்டை
ஆடப்பார் பல மொன்று அரைத்துக் கொண்டு அப்பனே அன்புறு காய் வாழைக் கச்சல் வாங்கி
கூடப்பா நன்றாக நறுக்கித் தட்டிச் சுகமாக அரைத்திடுவாய் பிசின் போலாகும்
தேடப்பா இம்மருந்தைச் சாத்திரேடே சேத்து நீ யரைத்திடுவாய் செப்பினேனே.

127. <u>நவ சிந்தாமணி லேகியம்:-</u>
செப்பினேன் சோகினீர் பலந்தானென்று செப்பினேன் நலமுக்காகப் புலத்தியனே அய்யா
திலி வரையின் நீறு பலன் சங்கு நீறு பலம் செப்பினேன் பலமொன்று மூன்றப்பா
சேரப்பா யிதுவெல்லாம் சுட்ட சுண்ணம் செப்பினேன் திரிகடுகு வாய்விளங்கம்
திப்பிலி மூலத் தோடு திரிகடுகு தானே.

128. சித்திர மூலத்தினொடு கடுகு ஓமம் செவியங் கோஷ்டம் மதிரம் சீரகந்தான்
முத்திரையாங் காந்தமொடு வசம்பு காயம் முளங்கவே வகை யொன்றுக் கரை பலமாய்ச் சேரு
சத்தி யெவச்சாரமொடு நவச்சாரம் சீனம் சவுக்காரம் பொரிகாரம் இணங்கன் கூடன்
பத்தியாங் கொடிக் களச்சி பருப்பின் உப்பு பாங்கான கல்லுப்பு பாதி சேரே.

129. பாதியாம் வகையொன்று கால் பலமாய்க் கூட்டு பஞ்பாகச் சரக்கெல்லாம் சூரணித்து
நீதியாங் கருவேப்பிலைச் சூரணத்தை யதிலே போடு கேள
கோர்தில்லாத் தேனொரு படி தான் வாரு
கூறுவின் நெய்யு மொரு படிதான் வாரே.

130. வாரப்பா மெழுகு பதமான வாட்டி வாகாகப் பீங்கானில் வழித்து வைப்பாய்
சேரப்ப லேகியந்தான் களஞ்சி யள்ளிச் சிறப்பான தாம்பிர செந்தூரம் தன்னை
சாரப்பா குன்றியிடையாகக் கொள் சாதகமாய்ப் புகையிலையும் புளியுந் தள்ளு
வேரப்பா அஷ்டகுன்மம் யெட்டுந் தீரும் வெகு சுருக்கு நவ சிந்தாமணி யென்றெண்ணே.

131. நவ சிந்தாமணியான லேகியத்தை நல்லதொரு கற்ப சித்திக்காகச் சொன்னேன்
புத்தியுள்ள வாதி மகான் ஜென்மந் தீர்ப்பான் யெவனும் தாம்புரத்தைச் செயிக்க மாட்டான்
இந்த வகை லேகியமுஞ் செய்ய மாட்டான் அவன் பிழைப்புக் கெதியினியும் ஒன்றே செய்வார் ஆகா வளி வயித்தியனு மென்றோதே.

132. ஓதினேன் தீட்சை யிரு நூற்றுள்ளே உத்தமனே வடுகநாட பூசை மார்க்கம்
ஆதியாம் வயித்தியனுக்கப்பா கேளு அவனறியாச் செந்தூர மாகாதென்றும்
சாதியாம் சூத்திர சென்மத்தோர்க் நன்றி சகலருக்கும் பலியாது தவறாகிடே போம்
வாருதியாங் கற்றவன் தனக்கு வயித்தியஞ் சொன்னேன் வயிரவனைப் பசை பண்ணி

133. பாரப்பா அயப்பொடி தான் பலந்தானென்ற பரிவான காந்தமத பலந்தானென்ற
சேரப்பா கெந்தகத்தான் பலந்தான் ரெண்டு சூனமான புனீறு களஞ்சி யொன்று
காரப்பா பழச்சாத்தால் யிரண்டு சாமம் கடுகவே அரைத்து ரவி தனிலே காயப் போடு
வாயப்பா மறுநாள் ரெண்டு சாமம் மடங்கவே நன்றாக அரைத்துப் பின்னே.
(மேல் தொடர்ச்சி யில்லை)

134. கிளிஞ்சி வித்தை---------தன்னை வரிசையாய் சமபாகமாக வாட்டி
தாங்கியே வெண் கருவு எருக்கம் பால் வார் சலமான பழச் சாறுந் தான் வெவ்வேறே
ஒங்கியே ஒரு சாமம் இரண்டும் நீரும் உத்தமனே அரைத்து வில்லை ரவியில் போடடே.

135. போடப்பா பத்து நாள் காய்ந்த பின்பு புகழான சுண்ணம்பு பொடிக்குள் வைத்து
சூட்டப்பா கமலமாய்த் தீயை மூட்டு அடியார்க இரு சாமம் சேர்ந்து நீரும்
ஆட்டப்பா யிதினோடு செந்தூரத்தாட்டு அடங்காத நோய்களெல்லா மகன்று போகத்
தோடப்பா சிப்பியுட சுண்ணஞ் சொல்வேன் திடமான புன்றறின் குருவிதாமே.

136. குருவாகுங் களிஞ்சியுட சுண்ணமப்பா கூறக் கேள் மைந்தனே அன்னம் பண்ண
தருவாகுங் கல்ச் சுண்ணமு வருங் கூட்டி சாதகமாய்ச் சுத்த சலந் தன்னிலேதான்
திருவாகக் கரைத்திலே கிளிஞ்சியிட்டு தீ யெரிப்பாய் இருசாமம் சென்ற பின்பு
அருளான அமைதனைப் பேசப் பண்ணிஆச்சரிய முன் மருந்து பூசக் கேளே.

137. பூசப்பா வீரமுடன் ரூடன் சீனம் பஞ்சு நவச்சாரமுடன் கல்லுப்பினோடு
வீசப்பா வகையொன்று பலந்தானென்ற மீறிய தோர் கிளிஞ்சி பத்துப் பலந்தான் பத்து
ஆச்சப்பா மருந்தெல்லா மரைக்கும் போது அண்டத்தின்ற பலம் ரெண்டு போடு
தீச்சப்பா பழச் சாத்திலரைத்துக் கொண்டு சிறக்கவே யுள்ப் பூசிப் புடத்தைப் போடடே.

138. புடம் போடு ஊ றெருவில் பலத்த சுண்ணம் பின்னெருக்கால் வெண் கருவா அரைத்து ஊது
திடமாகச் சுருக்கிட்ட சுண்ணமாகச் செய்கின்ற கை முறைக்குச் சோம்பலாகா
நடமாட வெருக்க மட்டும் வெண் கருவாலாட்டி நாலாறு புடம் போடக் கட்டிச் சுண்ணம்
உடனூடு சத்துருவா அண்ட நீரும் உத்தரொரு கிளிஞ்சிதனை மடக்கலாச்சே.

139. மடக்குமடா புலத்தியனே உனக்காய்ச் சொல்வேன் வரிசையாய் அண்டமது பத்து வாங்கு
கிடக்குமடா பாண்டத்தில் பீங்கான் நன் கெடியாக வதிற் போடு பழத்தின் சாறு
கடக்குமடா படி யொன்று அமுங்க வாரு கருங்காரஞ் சனமது களஞ்சிரெண்டு
அடக்குமடா பொடி செய்து அதிலே போடு அஞ்சு நாள் கடு வெய்யிலக் குள்ளண்டப் நீறே.

140. அண்டச் சுண்ணம் :-

அண்டத்தின் தோடெல்லாம் உருகிச் சாற்றி லப்பனே உரைந்திருக்கு மெடுத்துக் கொண்டு
அண்டத்தைச் சல்லுடனே யெரித்துப் போடும் அடங்காத பழச்சாறு சனத்தோடு
பிண்டத்தைக் கொல்லுவேனென் சொல்லிப் பேரிட்டு மூன்று நாள் ரவியில நீரும்
அண்டத்தினீ தனை கல்வத்திட்டு அதிகாரி யெருக்கம் பால் தன்னிலாட்டடே.

141. ஆட்டிடுவாய் ஒரு சாமம் வில்லை செய்து அப்பனே கதிர் முகத்தில் காய்ந்த பின்பு
யெடுத்துக் கொண்டு நாட்டுவாய் பத்திலொன்று வீரந் கூட்டி நலமான வெண் கரு வாலரைப்பாய் சாமம்
பூட்டுவாய் வில்லை செய்து ரவியிக் காய்ந்தால் புடமொன்று அன்பதெருக்குள்ளே போடடே.

142. போட்டெடுக்க அண்டமது பொலிந்து நீரும் போக்கோடே யிந்த வகையாருஞ் சொல்லார்
தாஉம்டிடிகமாய் மூன்மதனைச் சன்னி நீத்தம் சள வட்டக் கருவல்ல அம்ம வித்தை
மாட்டவே வாதத்திலேயுஞ் சுண்ணம் வளமாக நவச்சாரஞ் சமனாய்க்கூட்டி
மூட்டினால் நெட்டங்கப் பனியில் நீரும் முறையோஅட யேறதற்கு அரிசு மூந்தக் சொல்லே.

143. கொல்லுமடா அண்ட நீர் கோப மெத்தக் கொடும்பாவி உபரசத்தி லாதிச் சுண்ணம்
சொல்லுமடா சிப்பி தனைக் கொண்டால் கேளு கூறுகின்ற சிப்பி வித்தை நுலையாதப்பா
கொல்லுமடா சிப்பி சுண்ணத்தாலே கேளு கொள்த்தான் சவுக்காரஞ் செய்யும்போது
கொல்லுமடா பூனீற்றை நில உப்பைத்தான் கூசாமல் பாறையுப்பைக் கொல்லுந் தானே.

144. தானென்ற சவுக்காரமே தாலாச்சு தருவாகிக் கருத்து நின்ற நெட்டிச் சிப்பி
வானென்ற அண்டத்தில் நல்லச் சிப்பி மகத்தான சுண்ணமடா ஆதி ஆதி
வேனென்ற வயித்தியத்தை விளப் போய்த் தான் வேறுன வளலை யறுஞ்சிப்பிச் சுண்ணம்
நான் நன்மையச் சொல்லி விட்டேன் யினிப் பொய்யாது நலமான அண்டத்தால் சிப்பி நீரே.

145. அண்டத்தாற் சிப்பிதனைச் சுண்ணமாக்கு அரக்ரா சவுக்காரஞ் செவ்வாராதில்
தெண்டனிட்டு வாதம் வந்து முன்னே தாவும் செப்பினேன் வயித்தியனே செப்பக் கேளு
கண்டதொரு பவென்பார்கு குத்தானென்பார் கை முறையாய்க் காளுர்கள் கழுதை மாண்பர்
விண்டதொரு புனீ செய்ய மாட்டார் விளங்கவே சொல்லி விட்டேன் வேதை பாரே.

146. பாரப்பா சட்டை முனி புனீத்தின் வித்தை பாடினர் பூவதனைக் கருப்பண்ணமல்
கூறப்பா சொல்லுகிறேன் பனீருக கொடியதொரு சிப்பி சுண்ணம் பலந்தானென்று
சேரப்பா சோடசத்தின் ருத்தான்றி செகமறியப் பனீருய்ச் செப்பக் கேளு
சாரப்பா முதல் தீட்சை பூவைக் கேளு சாதகமாய் நாலு பலந் தாக்கிடாயே.

147. தாக்கிடாய் நிலவுப்புப் பாறையுப்பு தன்னோடு வகையொன்று பலத்தில் பாதி
தாக்கடா உப்புக்குப் பாதி வெள்ளை சவ்வீரம் வெள்ளைக்கு நாலிலொன்று
தாக்கடா குடனங்கே பலமுந் கால்தான் தயவான புருக்கிலே களஞ்சி கூட்டு
தாக்கடா வண்டரிசி களஞ்சி கூட்டு சாதகமாய் மருந்தொக்க அரைக்கக் கேளே.

148. அரைத்திடுவாய் பழச் சாத்தால் சாமமொன்று அப்பனே எருக்கம் ப்பால் சாமமொன்று
அரைத்திடுவாய் வெண் கருவால் சாமமொன்று அதியதொரு கருங்கார மெத்த வேண்டாம்
அரைத்திடுவாய் வில்லை செய்து ரவியில் போடு அப்பனே பட்சமொன்று காய்ந்த பின்பு
பரைக்காதி சிவபூசை. பாங்காய்ப் பண்ணி பரிவாகச் சுண்ணத்தி லெரித்திடாயே.

149. எரித்திடுவாய் முத்தீயும் மூன்று சாமம். யெனன. சொல்வேன் ஆதி திருவானவாறு
தரித்திரம் போம் வாதமுள்ளாம் சவுக்கார மென்னத் தத்தளிப்பா ரெண்ணை வாங்க
எரித்திடுவார் வடித்திடுவார் கோடி இதமாகப் புடத்தினிலே வைப்பார் கோடி
பெருத்த தொரு வித்தையது சித்தர்க்காகும் பேசாத லோகத்தோர் பிளைக்கும் வாரே.

150. வாறுன. உவர்ப்பூவைக் கூடுவாய்ச். செய்ய. மாட்டினேன் சவுக்காரம் வளலைக் கொக்கும்
தேறுன பூவிடை குருவைக் கொண்டு. செய்நீருய்ச் செய்து கொண்டு உப்பைக்கூட்டி
வீறுன உப்பாலே ஞூடன். கூட்டி வேதை கண்ட மார்க்கமடா விளங்கிப் பாரு
நீறுன முரைமுகமோ கோடா கோடி. நிலைக்கு நின்ற கூட்டினமோ கோடி யாமே.

151. <u>உருத்தமா</u>:-

பாரப்பா உளுந்து மா மேல்த் தோல் போக்கி பானியிலே ஊற வைத்துப் பதமே பாக்கிற்
சீரப்பா வகையாக ஊட்டிக் கொண்டு சிறக்கவே சுரந்தையட யிலையும் நன்ருய்க்
கூறப்பா அரைத்த பின்பு ரெண்டும் நேராய்க் கூட்டியே ரேகித்து நறு நெய்க்குள்ளே
சேரப்பா வெந்தெடுத்து அடையைத் தின்று தின்ற பின்பு நெய்யதனைக் குடித்திடாயே.

152. மடித்திடு நீ யிப்படியே அஞ்சு நாள்தான் கூறக் கேள் நாளைரன்டு குழந்து சேரும்
திடத்துடனே படி அரைக்கால் பாலி நேராய் தின்றிடவே சொன்னேன் கேள்

152. வெடி பிளந்த காலுக்கு சிப்பிச் சுண்ணம் விளக்கெண்ணை நெய்யுடனே நெல்லிக்காயும்
அடிக்கையிலே அரை நீயும் பூசிப்பாரு அப்பனே மண்டலத்தில் சுமலமாமே.

153. <u>நாக செந்தூரம்</u>:-

ஆமடா நாகத்தின் செந்தூரங் கேளு அப்பனே நாகமது பலந்தாளென்று
தாமடா குகைதனிலே யருகும் போது தாக்கடா மகேசிலைதான் பலந்தாளென்று
வேமடா வெண் கொளிஞ்சி வேரால் கிண்டி மீறவே நீதிப் போம் மூலி வேகம்
நாமடா கல்வத்தில் கொண்டு ரசமதிலே பலமொன்று வாரு வாரே.

154. வாரப்பா கல்வத்தில் கூட்டி யாட்டு மாய்ந்த பின்பு வீரமது பலந்தாளென்று
சேரப்பா மூலைப் பாலாலாட்டு ஆட்டு திறமாக மூன்று நாள் பனியில் போட
நேரப்பா கெந்தகந் தான் ரெட்டிப்பிட்டு நேர்மையாய்ப் பொற்றலையின் சாற்றுலாட்டி
பேரப்பா வில்லை செய்து காய்ந்த பின்பு பேதமில்லை புடந்தான் படந்தாறுரே.

155. ஆறுன படத்துக்குப் பொற்றலையின் சாற்றலரைத்தரைத்துப் போடு போடு சிவக்கும் பாரு
பேறுன நாகமது செந்தூரமாச்சு பெருமை சொல்ல வென்னாலே முடியாதப்பா
வாறுன கற்பமது கொள்ளும் போது வயத்திலே யெரிவு கண்டு சிறுநீர் கட்டும்
தேறுதே காயந்தாமலர்ந்து வத்தி தேரை போலினைத் தாக்கால் செய்தி கேளே

(மேல் ருஉ-வது ஏடு இல்லை)

156. <u>கருவங்கக் கட்டு</u>:-

அறிந்து கொண்டால் யெளிதல்ல பாம்பிருட விழுந்தான் காணே.

157. விழுமேறிக் கொண்டாற் போல் மெய்க்குள்ளான வியாதியெல்லாம் பாம்புதனைக் கண்டாலோடுந்
திடமான் நாகத்தின் செந்தூரத்னதச் செப்பில்லார் கை முறையாய்ச் சேரச் சொன்னேன்
அடவானது கருவங்கங் கட்டிக் கொண்டு அய்யய்யோ செந்தூரம் ஆர்தான் செய்வார்
படரான வங்கமது செத்து தானல் பரியை முந்திக் கொல்லுமடா பாரு பாரே.

158. கொல்லு மென்று வங்கத்தைக் கொல்லுங் கொல்லுங் கொடிதான சூதமது பலந்தாளென்று
செல்லும் கெந்திர ஙள் தனக்குப் பாதி சேரப்பா வெட்டிலொன்று காரங்கூட்டி
வல்லதொரு மிளகு தக்காளிச் சாத்திலாட்டி வாகாக யிரு சாமம் மரைத்துக் கொண்டு
அல்லவே பூநீ களஞ்சி கூட்டி அரகரா கருவங்கம் பலந்தான் ரெண்டே.

159. ரெண்டான வங்கமது உருகும் போது நிசமாகப் புனம் போலே வில்லை காய்ந்தால்
திரண்டர்தே கொட்டடா விருந்தும் பாரு சிறப்பாக மருந்தெல்லாந் தின்றால் வங்கம்
கண்டதுண்டோ கண்ணுள்ளே யிந்தக் கட்டு களங்கமடா வங்கமது உருகும் பாரு
திரண்டாடுங் கண் விட்டுக் குரியிலுள்ளே சீரணத்துப் போகாது கெவுரி கூட்டே.

160. கூட்டப்பா சூதத்தின் பாதி சேத்துக் கொட்டப் பா கருவங்கங் கட்டிப் போச்சு
மூட்டப்பா கண்டிடைக்குத் தாளகத்தை முத்தி பெறச் சத்தி செய்து யெடுத்துக் கொண்டு
காட்டப்பா வங்கமது உருகும் போது கடியாமல் தேவிதனைப் பொடித்து தூவு
பூட்டப்பா நாயுருவிக்கும் பால் கிண்டி புகழான கருவங்கம் பொலிந்து நீறே.

161. பொலிந்த நீர் கல்வத்தில் பொடிக்கத் தூளாம் பூகை மெட்டி லொன்று
உலத்திப் போடு மெலிந்து விடும் வங்கத்தில் பாதி சூதம் வீரமது வங்கத்திற் சமமாய்ச் சேரு
வலிந்துதப்பா வாலை ரசம் மூலைப் பாலாலாட்டி வாகாக வாட்டியே பனியிற் போடு
நலிந்து விடும் பின்பதிலே கெந்தி தன்னை ரெட்டிப்புச் சேர்த்து நாட்டியே---

162. நாட்டூர் பொற்றலையின் சாத்தாலாட்டி நாலா நாள் வில்லை செய்து ரவியில் போடு

ஓட்டிலே வைத்ததனை யோடு மூடி யறவாகச் சீலை செய்து காயவைத்து
தாஉட்டிகமா யஞ்செருவில் புடத்தைப் போடு சாதகமா யஞ்சு தரம் சாத்தாலாட்டி
மூட்டியே கை முறையாயப் புடத்தைப் போடு மூதண்ட வங்கமது முருக்கம் பூவே.

163. முருக்கம் பூ நிறமென்ன வொப்போ வல்ல முக்கியமடா செந்தூரமீ பனை வெல்லத்தில்
திருக்கறவே குன்றி கொள்ளு மண்டலந்தான் திரிகடுகு மதுரமொடு சரகமுங் கூட்டி
உருக்கமுடன் பத்தாசை கொண்டால் ஓடுமடா மேகமெல்லா மொளிந்து போச்சு
பெருக்கமுள்ள வாயுவெல்லா மெங்கே போச்சு பித்தமொடு குஷ்டமெல்லாம் ஒளிந்து போச்சே.

164. போச்சடா கிரந்தியொடு சூலை தாகம் புணர்ச்சி யுறுவிந்தவிலே சேர்ந்த வாய்வும்
போச்சடா உந்தியினுள்ளே வாய்வு பொருமலுடன் மேலேப்பம் புளுக்க மூலம்
போச்சடா குதக வாய்வு குன்மம் பூரணத்தைக் கொல்ல வந்த சயரோகங்கள்
போச்சடா பீனிசங்கள் கபால ரோகம் புத்தி கெட்ட சித்தர்களே புகலக் கேளே.

165. தங்க பற்பம்:-

புகலக் கேள் வங்கமது தங்க மொப்போ பொய்யில்ல கட்டியதோர் கூவங்கத்தால்
அகில மெல்லாம் படைத்தளித்த பிரமன் கூறு ஆக்கைக்கு உறுதி மெத்த அதனுற் சொன்னேன்
பகிரண்டம் பேதிக்கு தங்கம் பண்ணு பண்ணுவதி தங்கத்தாற் பரிந்து காணும்
செகமெல்லாம் கொள்ளாது தங்க பற்பம் செப்புகிறேன் புலத்தியனே சேர்ந்து காணே.

166. தங்க பற்பம்:-

தாணப்பா தங்கமது பலந்தானென்று கடியதொரு குகை தனிலே உருகும் போது
தோணப்பா சூதமொடு தாரஞ் சிங்கி சுத்தித்த வெள்ளீய்யம் சாதிலிங்கம்
பேணப்பா அரிதாரம் நமிளை வீரம் பேரான வெண்காரம் வெட்டுங் கூட்டி
பூணப்பா வகையொன்று பலமுங் கால்தான் புகழான பழச் சாத்தாலரைத்துக் கட்டே.

167. அரைத்திடுவாய் சாமமொன்று அப்பால் கேளு அரகரா பூன்றில் சாரங் கூட்டி
வரைக் கடங்கா நீருமும் வீரந் ஊலி மாட்டுவா யிரு சாமமரைத்துக் கொண்டு
நிரைக்கவே குன்றியிடை ரவியில் காய்ந்தால் நேராக ஒவ்வொன்றுக் கொடுக்க வாஙகும்
தரைக்கடங்கா ாங்கமது மருந்தெல்லா முண்டாற் சாதகமாய்த் தங்கத்தின் களங்க மாச்சே.

168. களங்கமா யிருக்கின்ற தங்கந்தன்னைக் கரு வளையல் வீரமொடு கார சாரம்
விளங்கவே பழச் சாத்தாலரைத்துக் கொண்டு வாகாகச் சோதித்துப் பின்பு கேளு
விளங் கொண்ட யமடா தங்கந் தாமம் வேத்த யிதிற் சொல்லுதற்கு நாவேறாது
உளம் பெறவே சூதத்தைச் சரியாய்ப் பூட்டி உத்தமனே வீரத்தை ஒன்றாய்த் தாக்கே.

169. தாக்கடா ரெண்டு பலம் முலைப் பாலாட்டு சாதகமாய்ப் பழச் சாறுங் கூட்டி யாட்டு
வாக்கடா யிரு சாமமரைத்த பின்பு வரிசையாய்க் கை முறையாய்ப் பனியிற் போடு
போக்கடா கெந்தகந்தான் ரெட்டிப்பிட்டு பூட்டடா தாள்கந் தான் நாலுக் கொன்றாய்
ஆக்கடா பத்திலொன்று சீலையு மிட்டு அப்பனே பொற்றாலையின் சாற்றிலாட்டே.

170. ஆட்டுவா யிருசாமம் வில்லை செய்து ஆதித்தன் கண்ட பின்பு குப்பி கேத்தி
மூட்டுவாய் மூன்று நாள் முத்தீயிட்டு முளங்கவே பயிர வறக்கு பூசை பண்ணு
தீட்டுவாய் செந்தூரம் அருணன் போலாம் சிறப்பான பூரண சந்திரோதை யந்தான்
நாட்டுவாய் சந்திரோதையத்தைக் கண்டால் நடுங்குமோ நோயெல்லாம் கண் காசமே.

171. கண் காசு நோயோடு காலன் பார்வை சடை கெட்ட ஆங்காரம் உள்ளே புக்கி

வின் காஞ் விந்து வங்கே மேலே யேறும் விறதாக மனந் தன்னை ஒன்றுய்ப் பண்ணும்
முன் கான அமுர்தந் தாணுணத்திப் பாயும் மொன்றல்லோ கற்பத்தை ஊதி பண்ணும்
பெண் காந்த செய்யோகம் பிலக்கு தென்றுவ் பேசாமல் சொல்லுமடா பிதர நீர்க் கோவே.

1.11.63.

172. பிற நீரர் ஆம்பலொடு மகோதரந்தான் பெருவயறு நீர்ச் சோபம் பித்த ரோகம்
திரமான வாதத்தி லெழுந்த ரோகம் சேற்பனத் தாலெழுந்த தொரு தோஷத் தோடு
மறவான பதினெட்டுச் சன்னி மூலம் மாறாத குன்மமொடு பிலிகையுந்தான்
உறவான கிரந்தியொடு மேகவுலை யோனிப்புத்து வுட நோய் யொன்றில்லாதே.

173. ஒன்றல்ல தசையிலுள்ள தோசம் போகும் உத்தமனே அபானனென்ற வாயுவாலே
ஒரு கோடி நோயுண்டா மொப்பார் சொல்லு ஒன்றல்லா நந்தியின் கீழ் அபானந் தானும்
உடலெல்லாங் கெடுப்பதுக்கு மூளங் கொண்டான் பார் ஒன்றல்ல சிவபோ சிவமாய்ச் செய்தால்
ஒமுடிந்து போ மூலத் தபானந்தானே.

174. தானென்ற நோயெல்லாங் (கெடுப்பதற்கு) அபான்னுலே சாத்சுவது பிருணந்தான் வாயுவாலே
வர்னென்ற அசபை பற்று முதாளெலே வந்சுதடா யேகு வாய்வு யிபிலே புக்கில்
வேனென்ற நோயெல்லாம் படைத்துதப்பா மேல் விழுந்த போகுமட்டும் ஊறே செய்யும்
மேனென்ற பரண சந்திரோதையத்தை எள்ள்ளவும் உட் கொள்ள விடைந்து போச்சே

175. போச்சடா சீனியிலே நெய் தேன் கூட்டி புகழ்ான திரிகடுகு சீர்கமுங் கூட்டிப்
போச்சடா நோயென்ற நோய்களெல்லாம் புகுமடா கடலெங்கே கான மெங்கே யென்று
போச்சடா கற்பத்தால் வந்த தோசம் போகுமடா பரணத்தைத் திறதாலே
போச்சடா கற்பங்களெல்லாம் பாரு பூண்ட சுயமாக்கினி குமாரன் போக்சே.

176. <u>தாளகத்தீனிறு</u>:-

பாரப்பா புலத்தியனே அய்யா கேளு பாங்கான தாளகத்தினிறு சொல்வேன்
சேரப்பா தாளகந்தான் பலந்தானென்று திறமான கல்ச் சுண்ணத்துள்ளே வைத்து
சாரப்பா அமுரி விட்டு நீத்து நீத்து தாளகந்தான் சுத்தியா மிரண்டு பத்தில்
வேரப்பா பழச் சாறுபடி தானாட்டு வெள்ளைச் சிமுலைப்பால் தான் படியிளாட்டே

177. ஊட்டியதோரரிதாரம் பொடி முடிச்சாற் றுத்தியே யரைத்திடுவா யிரண்டு சாமம்
மாட்டிய பின் வில்லை செய்து ரவியில் போடு அப்பனே மூன்று நாள்க் காய்ந்த பின்பு
கூட்டிய பின் செருக்காலடி முடியின் சாறு கொட்டு வாய் குகைக்குள்ளே புரசன் சாம்பல்
நாட்டியதோர் மேல் மூடிச் சீலை செய்து நலமாக ரெண்டெருவில் புடத்தைப் போடே.

178. புடம் போட்டுத் தாளகந் தான் வெளுத்து நீறும் பேசாதே தாளகத்தின் வெள்ளை தன்னை
திடம் பெறவே சிமிழுக்குள் பதனம் பண்ணு செப்பக் கேள் சூதபற்பம் திறமாய்ச் சொல்வேன்
அடம் பிலையுங் கடம்பிலையும் செருப்புக் காலும் அப்பனே வகைக்கொன்று படி சாறுக்குள்
விடந் திட்டு வாரதிலே காந்தைச் சாறு விளங்கவே படியொன்று அதிலே வாரே

179. வார்த்திடுவாய் முன் செய்யும் வரிசை கேளு வாகான காட்டுள்ளிக் கிழங்குச் சா
கார்த்திகையின் கிழங்குச் சாறு கடிதான அங்கோல மூலிச் சாறு
மேத்திடுவாய் வகைகொருபடி சாறுக எடுத்தல்லோ சூதமொரு பலத்துக்குந்தான்
பார்த்திடுவாய் காந்த சத்தின் கிண்ணத்துள்ளே பதையாமல் சாமமடா சுறுக்குத் தாக்கே.

180. சுறுக்கிட்ட பின்னெடுத்துச் சூதந் தன்னை நடியாக கல்வத்திலிட்டுக் கொண்டு
வெமத்திட்ட முன் சாத்தா லரைப்பாயப்பா மெழுகு போலாகி வரும் வில்லை செய்வாய்
உருக்கிட்ட ரவியிலே காயப் போடு உத்தமனே குகைக்குள்ளே வைத்து மூடி
வெறுக்கிட்ட சீலை செய்து புடத்தைப் போடு வெளியிலே பரை பூசை விளங்கச் செய்யே.

181. செய்யவே தேவியங்கே வார்த்தை சொல்வாள் திடமான சூதபற்பம் வாச்சு தென்பாள்
பைய்யவே அஞ்செருவில் புடத்தைப் போடு பாங்கான ரச வெள்ளை ரச கற்பூரம்
மெய்யப்பா கற்பத்தால் ஒட்ட ருசி விஷ நீராய்க் குறைநோவு கண்டுதானால்
வையப்பா குன்றியிடை சூத பற்பம் மகத்தான தாளகத்தின் பற்பங் கூட்டே.

182. கூட்டுவாய் குன்றியிடை ரெண்டுங் கூட்டிக் கொள் வாய் நூ ரூண்டின் வேம்பின் பட்டை
நீட்டுவாய் பலம் சீ ரு வெள்ளாட்டெச்சம் நிசமாக அஞ்சு பக்க பலமே சேத்துக்
காட்டுவாய் பூத் தயிலம் வடித்து வாங்கி கடுவான வீளி வேர் சூரணமே செய்து
மாட்டுவாய் செருப்புக் கால் தனிச் சாற் வாங்குவாய் படி நாலு அதிலே வா.ரே.

183. வார்ப்பா பின்னெவல்லம் பலந்தான் பத்து மருவியே கரைத்திடுவாய் அடுப்பில் வைத்து
சேர்ப்பா கமலத் தீயார்க முட்டு செப்பிதோர் வேம்பிட்ட தயிலந்தன்னை
சேரப்பா படியொன்றுங் கூட விட்டு கொட்டுவாய் வீளிச் சூரணத்திலேடு
சாரப்பா படி யரைத்கான புங்கம் பூவும் தனிச் சூரணத்திலேடே யரைப்படி தான் போடே.

184. போடப்பா மிளகு சுக்கோடே அங்காயம் புத்தோட்டில் கிராம்புந் தாலும்
ஆடக் கேள் சீரகமும் அதிமதுரத் தோடும் அப்பனே வகையொன்று களஞ்சி யொன்று
நாடக் கேள் காருகோல் அரிசி பலம் நாலு நாட்டடா பறங்கியுட பட்டை பலம் நாலு
கூடப்பா யிளவறுப்பாய்ச் சூரணஞ் செய் சூரணமெல்லாம் ஒன்றுய்க் கூட்டி வைய்யே.

185. வைத்த பின்பு காரெள்ளு பலந்தானஞ்சு மருவி யிடி செங்கொட்டை பல மிரண்டுங் கூட்டி
மேல் முடிவு அடுத்த ஏடு இல்லை.
(மேலுள்ள ஏடுகள் ஒன்றுக்கொன்று தொடர்ச்சி யில்லாமலுள்ளன . விடப்பட்டன)

****

க.ச:8111.63. முற்றும்

****